முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
முன்னிலை திரு.S. முத்துகுமாரவேல், B.Com.,B.L.,
முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
2020ம் ஆண்டு ஜூன் திங்கள் 17ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.447/2018ல் இடைநிலை மனு எண் 409/2018ல் இடைநிலை மனு எண் 558/2019**

மல்லிகா ...... மனுதாரர் /எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

/ எதிர் /

1. தவமணி
2. மங்கலட்சுமி ...... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இறுதி விசாரணைக்கு என் முன் வந்தபோது இடை நிலை மனு எண் 558/2019 மனுவில் மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. க. சங்கர் அவர்கள் ஆஜராகியும் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.A. நாராயணசாமி அவர்கள் ஆஜராகியும் மனுவின் மீது எதிர் மனு உறை ஏதுமில்லை என்றும் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும் இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ........

## உத்தரவு

உரிமையில் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 9 வீதி 7 மற்றும் பிரிவு 151 தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது இடைநிலை மனு எண் 409/2018 இல் 12.04.2019 அன்று 1ம் எதிர் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில்

எதிர்மனுதாரர்கள் தன் மீதும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பேரிலும் அசல் வழக்கு எண் 447/2018 தாக்கல் செய்யும் போது இடைக்கால உத்தரவு கேட்டு இடைநிலை மனு எண் 409/2018 தாக்கல் செய்ததாகவும், அந்த மனுவில் 12.04.2019 அன்று ஆட்சேபனை தாக்கல் செய்ய வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும், தனக்கு மேற்படி தேதிக்கு ஒரு வாரம் முன்பிருந்து மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு உடல்நலம் பாதிக்கப்பட்டு கிராமத்தில் நாட்டு வைத்தியம் செய்து கொண்டிருந்த காரணத்தால் தான் மேற்படி தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனையை செய்ய இயலாமல் போய்விட்டது என்றும் மனுதாரர் கூறியுள்ளார்.

3. இந்த மனுவிற்கு எதிருரை இல்லை என்றும் இந்த மனுவினை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்றும் எதிர் மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் மேற்குறிப்பு செய்துள்ளார்

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இந்த மனு அனுமதிக்கக் கூடியதா இல்லையா என்பதை காண்பதே ஆகும்

5. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

6. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன எதிர் மனுதாரர்கள் அசல் வழக்கு எண் 447/2018 மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யும்போது இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இடைநிலை மனு எண் 409/2018 தாக்கல் செய்தனர் மேற்படி மனுவில் ஆட்சேபனை செய்யவில்லை என்பதால் 12.04.2019 அன்று 1ம் எதிர்மனுதாரர் தோன்றா

தரப்பினர் ஆக்கப்பட்டார் மேற்படி உத்தரவினை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது இந்த மனுவில் தனக்கு மஞ்சள் காமாலை என்பதால் ஆட்சேபனை தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சிய சான்றா வணங்கள் தாக்கல் செய்ய வாய்ப்பளித்து உத்திரவு வழங்குவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். எனவே இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று கருதும் அதேவேளையில் எதிர் மனுதாரர்களுக்கு ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்ட போதிலும் தற்போது நாட்டில் நிலவும் Covid-19 பிரச்சினையின் காரணமாக இந்த மனுவினை செலவுத்தொகை இன்றி அனுமதிப்பதே சாலச் சிறந்ததாகும் என்று இந்த நீதிமன்றம் கருதி அவ்வாறே முடிவு செய்கிறது

7. முடிவாக இந்த இடைநிலை மனு எண் 558/2019 அனுமதிக்கப்படுகிறது தரப்பினர்கள் அவரவர் செலவு தொகையினை அவரவரே ஏற்க வேண்டும்.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்த பின்னர் 2020ம் ஆண்டு ஜூன் திங்கள் 17ம் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

/ஒம்/எஸ். முத்துக்குமாரவேல்
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி இல்லை.
மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் இல்லை.

/ஒம்/எஸ். முத்துக்குமாரவேல்

முதன்மை சார்பு நீதிபதி,

விழுப்புரம்.